**<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**எம்.சி.ஓ.பி.எண்.84/2014 நாள்.15.11.2022**

2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15-ம் நாள் மனுதாரர் தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஷ் | தொழில் | |
| த.பெ/க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | பெருங்களத்தூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 41 |

**<u>ம.சா.2</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்துபோன சின்னப்பதுரை எனக்கு தெரியாது. அவர் எனக்கு உறவினர் இல்லை. இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரராக இருந்து வருகிறேன். விபத்து நான் முன்பக்கம் இருந்து பார்த்தேனா அல்லது பின்பக்கம் இருந்து பார்த்தேனா என்று சொல்லஇயலாது. முன்னாடி சென்ற லாரியின் மீது பின்னால் சென்ற டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. லாரியின் பின்னால் சென்ற டாடா ஏசி வாகனம் போதிய இடைவெளி இல்லாமல் கவனக்குறைவாக சென்றதால் விபத்து ஏற்பட்டிருக்கும் என்றால் ஏற்பட்டிருக்கலாம்.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சத்தம் கேட்டு சென்று பாாத்தபோது இரண்டு வாகனங்களும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது அதில் ஒருவர் இறந்துவிட்டு இருந்தார். முன்னால் சென்ற வாகனத்திற்கும் பின்னால் சென்ற வாகனத்திற்கும் எவ்வளவு இடைவெளி

இருந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்த பிறகுதான் நான் அங்கு சென்றேன். லாரியின் ஓட்டுனர் விபத்து நடந்தபின்பு அங்கில்லை. அவர் அங்கிருந்து சென்று விட்டார். விபத்தில் ஒருவருக்கு பலத்த காயமும், மற்றொருவருக்கு லேசான காயமும் இருந்தது. லாரி வேகமாக சென்று கொண்டிருந்தது. பின்னால் சென்ற வாகனம் அதன் மீது மோதி விட்டது. யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்தபிறகுதான் விபத்து பற்றி எனக்கு தெரியும்.